# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C. 23/2025 | Date | : 21.11.2025 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : |
| Name | : திரு. சுரேஷ்குமார் | Calling | : |
| Father / Husband Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 21.11.2025.

**(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்.)**

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் சங்ககிரி தாலுக்கா, கனககிரி கிராமம், காகாபாளையம், வேலப்பன் கோவில் அருகில் வசித்து திருச்சி மாவட்டம், தொட்டியத்தில் உள்ள கொங்குநாடு, பொறியியல் கல்லூரியில் உதவி பேராசிரியராக வேலைப் பார்த்து வருகிறேன். கடந்த 27.09.2023ம் தேதி இரவு 11.30 மணியளவில் எனது அப்பா ஆறுமுகம், துணி வியாபாரத்திற்கு சென்றுவிட்டு வந்தவர் சேலம் – கோவை NH ரோட்டில் காகாபாளையம் பஸ் ஸ்டாப்பில் இறங்கி கிழக்கு பக்கமாக சர்வீஸ் ரோட்டிற்கு செல்வதற்காக சாலையை கடந்து சென்றபோது, TN 11 AV 0788 என்ற KIA கார் சேலம் பக்கமிருந்து வேகமாக ஓட்டி வந்து எனது தந்தை மீது மோதி விபத்து ஏற்படுத்தி விட்டதாகவும், சம்பவத்தை பின்னிட்டு FORD ECO காரில் வந்த டாக்டர் ஒருவர் காரை நிறுத்தி எனது தந்தையை பரிசோதித்து அவர் இறந்துவிட்டதாக, தகவல் சொன்னதாகவும், எனது தந்தையுடன்

பேருந்தில் பயணம் செய்த பாபு என்பவர் எனக்கு தகவல் சொன்னார். எனது தந்தையை சேலம் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் கொண்டு செல்வதாகவும் சொன்னார். அதன் பேரில் நான் சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். எனது தந்தைக்கு தலை, இடது முழங்கை, நெற்றி ஆகிய இடங்களில் பலத்த காயம் ஏற்பட்டு இறந்து இருந்தார்.

2. மேற்படி விபத்து சம்மந்தமாக நான் மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** புகார் கொடுத்த போது OD02H4140 என்ற FORD ECO காரின் தவறாக புகார் அளித்துவிட்டேன். சேலம் அரசு மருத்துவமனையில் எனது தந்தைக்கு பிரேத பரிசோதனை செய்தார்கள். பிரேத விசாரணையின் போது நானும் உடன் இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

1. விபத்து சம்பவம் எவ்வாறு நடந்தது என்றும் யாரின் அஜாக்கிரதையால் நடந்தது என்றும் எனக்கு நேரடியாக தெரியாது. இறந்துபோன எனது தந்தையின் அஜாக்கிரதையால் தான் நடந்தது என்றும், நடந்த விபத்திற்கு இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் இவ்வழக்கின் எதிரியின் மீது போலிசார் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன எனது தந்தை Zebra level crossing ல் சாலையை கடக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

2. விபத்து நடந்த இடத்தில் சாலை ஓர மின் விளக்குகள் இல்லை என்று சொன்னால் சரிதான். விபத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை.

Witness - Sd/- Sureshkumar

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/- D.Sivakuamar
**Judicial Magistrate No.II,**
Sankari.